# மாமதுரை வளர்ச்சிக்கு எதிரான தடைக்கற்களை தகர்த்தெறிவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ.22-

மாமதுரையின் வளர்ச்சிக்கு எதிரான ஒன்றிய பா.ஜ.க. அரசின் தடைக்கற்களை தகர்த்தெறிவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**#AIIMS-உம் வராது, #MetroRail-ஐயும் வரவிட மாட்டோம் என மதுரையை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக் கூடல்நகரில் கூடிய நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர்...**

**அனைத்து வழிகளிலும் போராட்டத்தை முன்னெடுத்து, தமிழர்களின் பண்பாட்டுத் தலை நகராகத் திகழும் மாமதுரையின் வருங்கால வளர்ச்சிக்கு எதிராகப் போடப்படும் தடைக்கற்களைத் தகர்த்தெறிவோம்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2025) சென்னை சேப்பாக்கம், திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லேடி வெல்லிங்டன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 771 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நே.சிற்றரசு உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில்

# 89.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 584 குடியிருப்புகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

### திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்!

**சென்னை,நவ.22-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் குடிசை பகுதிகளே இருக்கக்கூடாது என்ற தொலைநோக்குப் பார்வையோடு 1970 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி ஏழை எளிய மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தந்தார்.**

அவரது வழியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு குடிசை மாற்று வாரியம் என்பதை தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக உயர்த்தியதோடு, அனைத்து குடியிருப்பு வளாகங்களிலும், சாலை, குடிநீர், கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி வழங்கி வருகின்றார்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேம்புலி அம்மன் கோயில் திட்டப்பகுதியில் 1976 ஆம் ஆண்டு 295 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 144 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் வேம்புலியம்மன் கோயில் தெரு திட்டப்பகுதியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் 32 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் 188 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டன.

வேம்புலியம்மன் கோயில் தெரு திட்டப்பகுதி குடியிருப்பில் குடியிருந்த 144 குடியிருப்புவாசிகளுக்கும், வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை, வெளியில் தங்கியிருப்பதற்காக 24 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் சென்னையில், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சீனிவாசபுரம் பகுதி - 1 திட்டப்பகுதியில் 57 கோடியே 07 இலட்சம் ரூபாய் செலவில் தூண் மற்றும் 14 தளங்களுடன்





396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப் பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அனைத்து வீடுகளும் மகளிருடைய பெயரிலேயே பதிவு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.11.2025) சென்னை ஹாரிங்டன் சாலை வேம்புலி அம்மன் திட்டப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வேம்புலி அம்மன் கோயில் மற்றும் சீனிவாசபுரம் பகுதி1 ஆகிய திட்டப் பகுதிகளில் மொத்தம் 89.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 584 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 166 திட்டப் பகுதிகளில் 6363.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 55,831 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.ஆர். என். கார்டன் திட்டப் பகுதியில் 85.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 501 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினையும், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் ராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, செட்டித் தோட்டம் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 45.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 243 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட எல்லீஸ்புரம் திட்டப் பகுதியில் 15.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 85 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் போது குறித்த காலத்திற்குள் கட்டுமான பணிகளை முடித்து குடியிருப்புகளை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றும் அதற்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு பணிகள் விரைந்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்

இந்நிகழ்ச்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி.சேகர் த.வேலு, இ,பரந்தாமன், ஆர். மூர்த்தி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங் நிலைக்குழுத் தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமை பொறியாளர்கள் வி.எஸ். கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உலகளாவிய திறன் மையங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்திட

# ANSR நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நிறுவனம் கையெழுத்திட்டது!

சென்னை, நவ. 22-

தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நிறுவனம் (Guidance Tamil Nadu), உலகளாவிய திறன் மையங்களை (GCCs) நிறுவுதல் மற்றும் விரிவாக்கு வதில் உலக அளவில் முன்னணியில் உள்ள ANSR நிறுவனத்துடன் நேற்று (20.11. 2025) ஒரு முக்கியமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது. ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் மற்றும் அதிவேகமாக வளரும் தொழில் நிறுவனங்களுக்காக உலகளாவிய திறன் மையங்களை (Global Capability CentresGCC) நிறுவுவதில் ANSR நிபுணத்துவம் பெற்றது.

இந்தக் கூட்டாண்மை, தொழில்நுட்பம், புதுமை மற்றும் உயர் மதிப்புள்ள உலகளாவிய சேவைகளுக்கான உலகின் மிகவும் கவர்ச்சிகரமான இடங்களுள் ஒன்றாக தமிழ்நாட்டின் நிலையை வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய மைல்கல்லாகத் திகழும்.

200க்கும் மேற்பட்ட உலகளாவிய திறன் மையங்களை (GCC) நிறுவியுள்ள,




2 இலட்சத்திற்கும் அதிகமான உலகளாவிய நிபுணர்களைப் பணியமர்த்தி; 21 ஆண்டுகால செயல்பாட்டு நிபுணத்துவம் கொண்டு 12 மில்லியன் சதுர அடி ரியல் எஸ்டேட் கட்டமைப்பை செயல்படுத்தியுள்ள ANSR மற்றும் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் வேகமாக வளரும் உலகளாவிய நிறுவனங்களுக்கான திறன் மையங்களை உருவாக்குதிலும் விரிவாக்குவதிலும் முன்னணியில் உள்ளன. அவர்களின் நிபுணத்துவம் செயற்கை நுண்ணறிவு பொறியியல், இணையப் பாதுகாப்பு, தயாரிப்பு மேம்பாடு, டிஜிட்டல் வர்த்தகம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), தரவு அறிவியல் மற்றும் நிறுவன செயல்பாடுகள் (Enterprise operations) ஆகியவற்றில் பரவியுள்ளது.

தொழில், முதலீட்டு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் இந்த ஒப்பந்தம் குறித்து கூறும்போது:

"இந்தக் கூட்டாண்மை மூலம், ANSR அடுத்தகட்ட உலகளாவிய நிறுவனங்க ளைக் கொண்டு வர உதவும். கொள்கை வசதிகள், விரைவான ஒப்புதல்கள், இடத் தேர்வு மற்றும் வலுவான திறமை இணைப்புகள் ஆகியவற்றில் நாங்கள் அவர்களுக்கு ஆதரவளிப்போம்.

உலககளாவிய திறன் மேம்பாட்டு மையத்திற்கு உலகிலேயே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற நாங்கள் விரும்புகிறோம். தொழில்நுட்பம், ஆட்டோமொபைல், BFSI (வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு), பொறியியல், விண்வெளி மற்றும் சில்லறை வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளதைக் காண்கிறீர்கள். அவர்கள் எங்களின் திறமை, எங்களின் உள்கட்டமைப்பு மற்றும் இந்த அரசின் ஸ்திரத்தன்மையின் காரணமாக தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர்."

ANSR நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி லலித் அஹூஜா அவர்கள் இந்த ஒப்பந்தம் குறித்து கூறும்போது :

"வலுவான திறமை, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, முற்போக்கான நிர்வாகம் மற்றும் செழிப்பான புத்தாக்கச் சூழல் ஆகியவற்றுடன், உலகிலேயே மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த GCC இலக்கு மாநிலமாக மாறத் தேவையான அனைத்து அம்சங்களையும் தமிழ்நாடு கொண்டுள்ளது. அடுத்த தலைமுறை உலகளாவிய நிறுவனங்களை மாநிலத்திற்குக் கொண்டு வர அரசாங்கத்துடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்." என்று குறிப்பிட்டார்.

தொழில்நுட்பம், ஆட்டோமொபைல், BFSI, பொறியியல், விண்வெளி மற்றும் சில்லறை வர்த்தகத் துறைகளில் உள்ள முன்னணி உலகளாவிய நிறுவனங்களின் GCCகளுக்கு தமிழ்நாடு ஏற்கனவே தாயகமாக உள்ளது. மாநிலத்தின் அர்ப்பணிப்புள்ள GCC கொள்கை, நிகரற்ற வேலைவாய்ப்புத் தகுதி மற்றும் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப பணியாளர்களுடன், ANSR உடனான இந்த ஒத்துழைப்பு வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க முதலீடு கள், மேம்பட்ட புத்தாக்கத் திறன்கள் மற்றும் 10,000 க்கும் மேற்பட்ட உயர் மதிப்புள்ள GCC வேலைகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாட்டின் GCCகளுக்கான முதன்மையான உலகளாவிய இடமாக மாறும் பயணத்தில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், புதுமை, போட்டித்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஆதரிக்கும் எதிர்காலத்திற்குத் தயாரான டிஜிட்டல் பொருளா தாரத்தை உருவாக்குவதற்கான அதன் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துகிறது.

### தா.இளைய அருணா தலைமை! ஆர்.டி.சேகர் –ஐட்ரீம் மூர்த்தி முன்னிலை! கலாநிதி வீராசாமி–ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு

# இராயபுரத்தில் இளைஞர் எழுச்சிநாளை முன்னிட்டு 500 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை-நிதி உதவி!

## அமைச்சர் பி.கே. சேகர் பாபு– அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்குகின்றனர்

சென்னை, நவ. 22-

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு 500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நிதி உதவி வழங்கும் விழா இன்று (22.11.2025-சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு இராயபுரம், அறிவகம் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு சென்னை மாநகராட்சி நகரமைப்பு குழுத் தலைவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான தா.இளைய அருணா தலைமை வகிக்கிறார். இரா.செந்தில் குமார், வ.பெ.சுரேஷ், மு.கோபி, நா.சண்முகம், வே.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். த.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், பி.ஜெயலட்சுமி, எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ்,சு.திருஞானம், இ. மதன், வி.மலையம்மாள்,க. கோவிந்தசாமி, வழக்கறிஞர் ஜெ. காணிக்கைநாதன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் நிதி உதவியினை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆகியோர் வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிலி வீராசாமி எம்.பி.,ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ.,அ.சுபேர் கான்,பி.டி.பாண்டிச் செல்வம், ந.மனோகரன், இரா. கருணா, இரா.நரேந்திரன், ஆர். வெற்றி வீரன்,எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், க.நாகம்மை, கி.இராஜேந்திரன், ச.சேகர். லியோ டி.சுரேஷ், கார்த்திக்செங்குட்டுவன், லட்சுமிவேலு,லயன் தீனதயாளன், பி.சோமசுந்தரமூர்த்தி, லயலோ கே.மதன், பி.செந்தில், பா.வேளாங்கண்ணி, ரெயின்போ என்.விஜயகுமார், க.கலைச்செல்வன், காட்டன் சதீஷ்குமார், என்.கிருஷ்ணன், கே.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, கொரியர் பி.முருகன், எஸ்.புகழேந்தி, பாலா லட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், ஐ.சி.எப்.பழனி, என்.எம்.வெங்கட், கே.லட்சுமணன், எல்.சீனிவாசன், எம்.பாலாஜி, ஏ.அன்வர், பிரியாணி எம்.பாலா, ஆர்.ஜெயசங்கர், என். பாரி, என்.குமார், இரா.பொன்முடி, வி.குமார், அத்தோ பி.முனுசாமி, எஸ்.சுரேஷ், என்.அப்துல்மாலிக், ஏ.சாந்தகுமார், எஸ்.ஜோஸ்வா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். 50 வது வட்டக் கழகச் செயலாளர் மீனவர் நல வாரிய அலுவல் சாரா உறுப்பினர்ஆர். வி.கணேஷ் நன்றி கூறுகிறார்.

### ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் —

# புதுடெல்லியில் - எஸ்.செல்வகுமாரி எழுதிய 'சட்டத்தின் குரல்' நூல் வெளியீட்டு விழா!

## மேனாள் நீதியரசர்கள் — மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் எம்.பி. பங்கேற்பு!

புதுடெல்லி, நவ. 22 -

சென்னை ஆலந்தூர் கோ. மோகனரங்கன் சட்ட ஆய்வு மையம் சார்பில் 'சட்டத்தின் குரல்' என்ற நூல் புதுடெல்லியில் வெளியிடப்பட்டது.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர் எஸ்.செல்வகுமாரி எழுதிய 'சட்டத்தின் குரல்' நூல் வெளியீட்டு விழா, புதுடெல்லி, ரபி மார்க் - கான்ஸ்டிட்யூசன் கிளப் ஆப் இந்தியா'வில் நேற்று (21.11.2025-வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு மேனாள் தலைமை நீதியரசர் எம். கற்பக விநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

நூலை வெளியிட்டு, மேனாள் தலைமை நீதியரசர் (சென்னை உயர்நீதிமன்றம்) டி.ராஜா அவர்கள் சிறப்புரை வழங்கினார்.

மேனாள் நீதியரசர், உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் எஸ். நாகமுத்து, சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் எஸ்.எஸ். சுந்தர் மற்றும் மாநிலங்களவை கழக உறுப்பினர், மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் பவுண்டேசன், சென்னை சார்பில் அதன் இயக்குநர் மோ. பாட்டழகன் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பி.எஸ். அகிலன் ஆகியோர் இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்"!



## 23.11.25 முதல் 05.12.25 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

## அமைச்சர்– மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

**சென்னை,நவ.22-**

**"அன்னம் தரும் அமுத கரங்கள்" கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:**

நாள் 23.11.25 ஞாயிற்றுக்கிழமை 277 ஆம் நாள்

**அம்பத்தூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 79, காந்திநகர் பொது சுகாதார நிலையம், காந்தி நெடுஞ் சாலை, ஒரகடம். வட்ட செயலாளர் வே. ரவீந்திரன்

2) வட்டம் 79அ, வெங்கடேஸ்வரா நகர், ஏரிக்கரை சாலை, மாசிலாமணிஸ்வரர் தெரு, சந்திப்பு, வட்ட செயலாளர் பு. வீரா (எ) வீரராகவன்

நாள் 24.11.25 திங்கட்கிழமை 278ஆம் நாள்

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

1) வட்டம் 94, சிட்கோ நகர், வட்ட செயலாளர் சிட்கோ சேகர்

2) வட்டம் 94 அ, ரெட் ஹில்ஸ் ரோடு, வில்லிவாக்கம்.

வட்ட செயலாளர், ஆர்.தீனதயாளன்

நாள் 25.11.25 செவ்வாய்க் கிழமை 279 ஆம் நாள்

**திரு.வி.க நகர் தெற்கு பகுதி**

1) வட்டம் 75அ, எஸ் .எஸ் புரம் ஆ மெயின் தெரு, பிரிக்லின் சாலை சந்திப்பு, புரசை மாவட்ட அமைப்பாளர், இரா.வீரமணி,

2) வட்டம் 75, பராக்கா சாலை, மெயின் தெரு, ஒத்தைவாடை தெரு சந்திப்பு,

நம்மாழ்வார் பேட்டை, வட்ட செயலாளர் வி.கா வெங்கடேசன்

நாள் 26.11.25 புதன்கிழமை 280 ஆம் நாள்

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

1) வட்டம் 97, பட்டாச்சாரி தெரு, பெரியார் சாலை சந்திப்பு (செல்லியம்மன் கோயில் அருகில்) வட்ட செயலாளர் விக்னேஷ் சீனிவாசன்

2) வட்டம் 97 அ, சோலை 3 வது தெரு, வட்ட செயலாளர் ச. மனோகரன்

நாள் 27.11.25 வியாழக்கிழமை 281 ஆம் நாள்

**எழும்பூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 77அ, சுந்தரபுரம், புளியந்தோப்பு, வட்ட செயலாளர் வி. அபாய்

2) வட்டம் 78அ, சூளை, கணபதி ஹோட்டல் அருகில், வட்ட செயலாளர் ந. பாலு

நாள் 28.11.25 வெள்ளிக்கிழமை 282 ஆம் நாள்

**திரு.வி.க நகர் வடக்கு பகுதி**

1) வட்டம் 74 அ, வாழைமா நகர், கிருஷ்ணதாஸ் சாலை சந்திப்பு, ஓட்டேரி

வட்ட செயலாளர் G. கிருஷ்ணகுமார்.

2) வட்டம் 71, நெல் வயல் சாலை, பெரம்பூர், வட்ட செயலாளர் பரிமள சுரேஷ்பாபு

நாள் 29.11.25 சனிக்கிழமை 283 ஆம் நாள்

**துறைமுகம் தொகுதி**

1) துறைமுகம் கிழக்கு பகுதி வட்டம் 55 அ, ஆச்சரியப்பன் தெரு, வராதா முத்தியப்பன் தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் R.A அஸ்லாம்

2) துறைமுகம் மேற்குபகுதி வட்டம் 54, தங்கசாலை தெரு,

(அரசு அச்சகம் அருகில்) வட்ட செயலாளர் எம். ஜெய்சங்கர்

நாள் 30.11.25 ஞாயிற்றுக் கிழமை 284 ஆம் நாள்

**கொளத்தூர் மேற்கு பகுதி**

1) வட்டம் 69, ஜி .கே. எம் காலனி, 6வது தெரு, வட்ட செயலாளர் M.j.c பாபு

2) வட்டம் 64, நேதாஜி நகர், (ஜானகிராம் நகர் மெயின் சந்திப்பு)

வட்ட செயலாளர் S. முருகன்

நாள் 1.12.25 திங்கட்கிழமை 285 ஆம் நாள்

**அம்பத்தூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 90, காமராஜ் நகர், பாடிகுப்பம் ரோடு, வட்ட செயலாளர் நா. நெப்போலியன்

2) வட்டம் 93, கங்கையம்மன் நகர், பிரதான சாலை சாய்பாபா கோவில் அருகில்,

வட்ட செயலாளர் இரா. டீக்கா

நாள் 2.12.25 செவ்வாய்க் கிழமை 286ஆம் நாள்

**எழும்பூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 61, குழந்தைகள் நல மருத்துவமனை, தமிழ் சாலை, எழும்பூர்

வட்ட செயலாளர் S. டால்பின் ஹரி

2) வட்டம் 61அ, டிரான்ஸ்போர்ட் லைன், புதுப்பேட்டை

வட்ட செயலாளர் இ.மொய்தீன்

நாள் 3.12.25 புதன்கிழமை 287 ஆம் நாள்

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 70, ஞானாம்பாள் 1வது தெரு அயன்புரம் வட்ட செயலாளர் D. சந்திரசேகர்

2) வட்டம்70அ, நீலம் தோட்டம் இரண்டாவது தெரு பெரம்பூர் வட்ட செயலாளர் ப.அன்பரசு

நாள் 4.12.25 வியாழக்கிழமை 288 ஆம் நாள்

**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் மூ. விஜயகுமார்

2) வட்டம் 84 அ, தொடர்வண்டி சாலை, பெரியார் நகர், கொரட்டூர்,

வட்ட செயலாளர் த.வ.லால்

நாள் 5.12.25 வெள்ளிக்கிழமை 289 ஆம் நாள்

**துறைமுகம் தொகுதி**

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60, நான்காவது கடற்கரை சாலை, வரதராஜன் தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் K.கவியரசு

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54 ஆ, சுந்தர முதலி தெரு, அம்மன் கோயில் தெரு வட்ட செயலாளர் ஆர். ரவிச்சந்திரன்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.